[1972 சனவரி 25

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை ரூ. 20 அல்லது ரூ. 30 என்று நினைக்கிறேன். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு அவர்கள் காலத்தை நடத்த முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, இன்றைக்கு தியாகிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஐம்பது ரூபாயாக உயர்த்த முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் தியாகிகளையும் முதியோர்களையும் ஒன்றாகக் கருதுவது நல்லதல்ல.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, முதியோர்களுக்குக் கொடுக்கக்கூடிய பென்ஷன் தொகை மாதக் கடைசியில் தான் கிடைக்கிறது. அது மாத ஆரம்பத்திலேயே அவர்களுக்குக் கிடைத்தால் அந்த மாதத்தைக் கடத்துவதற்கு அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது வாழ்வின் கடைசியில் கொடுக்கப்படுவதாக இருப்பதால் மாதக் கடைசியில் கொடுக்கப் படுகிறதோ என்னவோ ! (சிரிப்பு) இனி, அம்மையார் அவர்கள் கூறிய அந்தக் குறைபாடு நீக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும்.

Tamil Nadu Raffles

*** 35 Q.—THIRU N. DENNIS :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the proceeds from the sale of raffle tickets are to be allotted to medical institutions in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு லட்சம் ரூபாய் வீதம் பத்து மாவட்டங்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்கப் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்து தனி விவரம் இப்பொழுது இல்லை.

திரு. சு. துரைசாமி : பரிசுச் சீட்டு மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

@ 208–209 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

1972 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை பரிசுச் சீட்டின் மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை 12½ கோடி ரூபாய்.

Cattle nuisance in Madras

*36 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to meet the cattle nuisance in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பராரியாய்த் திரியும் கால் நடைகள் வளைத்துப் பிடிக்கப்பட்டு, சென்னை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ள கால்நடைப் பட்டி களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சென்னை மாநகர் காவல் துறைச் சட்டத்தின் 71-வது பிரிவின் (IX) பகுதியின் கீழ், கால்நடை உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்படு கின்றன. குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்படுகிற கால்நடை உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்படுகின்றனர்.

திரு. என். டென்னிஸ்: இதன் தொல்லையைப் போக்க கடுமையான நடவடிக்கை அடங்கிய சட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது விதிக்கப் படுகிற அபராதத் தொகை 50 பைசா, ஒரு ரூபாய் என்றுதான் இருக்கிறது. அதை 3 ரூபாய், 5 ரூபாய் என்று அதிகப்படுத்த திருத்தம் கொண்டுவரலாமா என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்தக் கால்நடைத் தொல்லையைப் போக்குவதற்கு சென்னை நகரத்தில் யாரும் கால்நடை வைத்துக் கொள்ளக் கூடாது என்பதாக சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரும் உத்தேசம் எதுவும் இல்லை. ஆனால் சில கால் நடைகள் கேட்பாரற்று—வளர்ப்பாரற்று—பட்டிகளில் அடைத் தாலும் விடுவித்துக்கொண்டு போவதற்கு யாரும் வராத முறையில் அனாதைகளாக அடைபட்டுக்கிடக்கிற நிலை இருக்கிறது. இது போன்ற கால்நடைகளை சென்னையில் உள்ள பண்ணைகளில் விட்டு விடலாமா என்கிற யோசனை அரசுக்கு இருந்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எஸ். பி. ஸி. ஏ. மூலம், அலைந்து திரியும் கால்நடைகளைப் பராமரிக்க வேண்டிய உதவி அளிக்க அரசு முன்வருமா?